**07.03.2024**
**OS 450/2019**
**பி.வா.சா.1 தமிழ்செல்வி**
**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

சர்வலிங்க கோனார் எழுதிய உயில் ரத்து பத்திரம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. என்னுடைய நிருபணவாக்கு மூலத்தில் பாரா-9 மற்றும் 10ல் உயில் ரத்து பத்திரம் பற்றி நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த உயில் ரத்து பத்திரத்தை நான் மறுக்கிறேன். நான் உயிலையும், உயில் ரத்து பத்திரத்தையும் படித்து பார்த்துள்ளேனா என்றால் நான் படித்து பார்க்கவில்லை. உயிலை எனது அப்பா படித்து காட்டியுள்ளார். என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் உள்ள விவரத்தை நான்தான் தெரிவித்தேன். மேற்படி உயிலையும், உயில் ரத்து பத்திரத்தையும் படித்து பார்த்துதான் நான் அதை மறுப்பு தெரிவித்துள்ளேன் என்றால் எனக்கு தெரிந்த விவரத்தை சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.5 உயில் ரத்து பத்திரத்தில் வாதி, சர்வலிங்ககோனாரின் சுவீகார மகள் என்று சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது, நான் அதை ஒத்துக்கொள்ளவில்லை. வா.சா.ஆ.5 உயில் ரத்து பத்திரம் செல்லாது என்பது சம்மந்தமாக நானோ, மற்ற பிரதிவாதிகளோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை. வா.சா.ஆ.5 உயில் ரத்து பத்திரம் மூலமாக சர்வலிங்ககோனாரும், அவரது மனைவியும் 1976ல் எழுதி வைத்த வா.சா.ஆ.4 உயிலானது ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.4 உயிலானது வா.சா.ஆ.5 படி ரத்து செய்யப்பட்டுவிட்டது என்பதால் 1976ல் எழுதி வைத்த வா.சா.ஆ.4 உயில் அமுலுக்கு வரவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்குத் தெரியாது. 1976ல் எழுதி வைத்த வா.சா.ஆ.4 உயில் இருவரும் சேர்ந்து எழுதி வைத்துள்ளதால் ஒருவர் மட்டும் அதை ரத்து செய்தால் உயில் செல்லாது என்ற வாசகம் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என்னுடைய நிருபணவாக்கு மூலத்தில் இருவரும் சேர்ந்து எழுதி வைத்துள்ளதால் ஒருவர் மட்டும் அதை ரத்து செய்தால் உயில் செல்லாது என்ற வாசகம் தவறு என்றால் சரிதான். அழகம்மாளுடன் பிறந்த பூசாரிகோனார், அழகப்ப கோனார் ஆகியோரின் இறப்பு சான்றிதழ் எதுவும் என் வசம் இல்லை. பூசாரிகோனார், அழகப்ப கோனார் ஆகியோர் அழகம்மாளுக்கு முன்னதாக இறந்ததாக எதனடிப்படையில் நான் சொல்கிறேன் என்றால் நான் கேள்விபட்டதை வைத்து சொல்கிறேன். பூசாரிகோனார், அழகப்ப கோனார் ஆகியோர் அழகம்மாளுக்கு முன்னதாக இறந்ததாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் அந்த

விவரம் எனக்கு நேரடியாகத் தெரியாது. என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் சர்வலிங்க கோனார் இறந்தபின்னிட்டு, வாதி அவர் வசம் வைத்துக்கொண்டு, சுயமாக முடிவு எடுக்காமல் அவருடைய கட்டுப்பாட்டில்தான் இருந்து வந்தார் என்று சொல்லியுள்ள சங்கதிகளை நான் எதிருரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அந்த விவரங்களை எதிருரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாதியும், அவரது கணவருவம் சர்வலிங்க கோனாரை மிரட்டி வா.சா.ஆ.5 உயில்ரத்து பத்திரத்தை எழுதி வாங்கியுள்ளார் என்றும், இந்த விவரத்தை எதிருரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். (குறிப்பு:-மேற்படி விவரம் 18.11.2020ல் போட்ட எதிருரையில் சொல்லப்படவில்லை.) (அதைபோல 29.11.2019 எதிருரையில் சொல்லப்படவில்லை) மேற்படி உயில்ரத்து பத்திரம் செய்யும்போது நான் உடனில்லை. நான் என்னுடைய எதிருரையில் சொல்லப்படாத விவரத்தை நான் பிரமாண பத்திரத்தில் சொல்லியுள்ளேன் என்றும், வா.சா.ஆ.5 ஆவணம் மற்றும் அதில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் உண்மையான விவரங்கள்தான் என்றால் சரியல்ல. இந்த உயிலை எழுதிய பூசாரிகோனாரும், அம்மாபிள்ளையும் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். அவர்களுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 5பேர், அவர்களில் 2பேர் தற்போது உயிருடன் உள்ளார்கள். திருப்பதி மற்றும் முத்து ஆகியோர் உயிருடன் உள்ளனர். தாவா சொத்தை பூசாரிகோனாருக்கு பின்னிட்டு அவரது மகன்கள்தான் உழவடையில் இருந்தார்கள் என்றால் இல்லை. திருப்பதி மற்றும் முத்து ஆகியோரை விசாரித்தால் எதனடிப்படையில் இருந்தார்கள் என்ற விவரம் தெரிய வரும் என்றால் அது எனக்குத் தெரியாது. என்னுடைய தரப்பில் வேறு யாரையும் சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் இல்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒம்:-S.கணேசன்
சார்பு நீதிபதி,
மேலூர்.